வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

நாள் 28.10.2024 திங்கட்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

**தலைப்புச் செய்திகள்**

- பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஸ்பெயின் பிரதமர் திரு. பெட்ரோ சாஞ்சேஸ் ஆகியோர் இணைந்து, இன்று வதோதராவில் ராணுவ விமானங்களுக்கான உற்பத்தி ஆலையை திறந்து வைத்தனர்.
- பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை காணொளி காட்சி மூலம், சுமார் 51 ஆயிரம் இளைஞர்களுக்கு, பணி நியமனக் கடிதங்களை வழங்குகிறார்.
- தேசிய இலஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு வாரம், இன்று முதல், நாடு முழுவதும் கடைபிடிக்கப் படுகிறது.
- புதுச்சேரியில், அடுத்த ஆண்டு ஜனவரி 1ஆம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு, வாக்காளர் பட்டியலை சுருக்க முறையில் திருத்தும் பணிகள், நாளை தொடங்க உள்ளன.

<u>மோடி குஜராத் -1 (18)</u>

குஜராத் மாநிலம் வதோதராவில், C-295 ரக ராணுவ விமானங்களை தயாரிப்பதற்கான, டாடா விமான உற்பத்தி வளாகத்தை, இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடி ஸ்பெயின் பிரதமர் திரு. பெட்ரோ சாஞ்சேஸ் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். இந்தியாவில் ராணுவ விமானங்களை தயாரிப்பதற்கான முதலாவது தனியார் துறை விமான உற்பத்தி ஆலையாக இந்த ஆலை அமைகிறது. உலக அளவிலான விமான உற்பத்தித் துறையில் நம்பகமான கூட்டாண்மை நாடாக இந்தியாவின் அந்தஸ்தை இந்த ஆலை வலுப்படுத்துவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடக்க விழாவில் பேசுகையில் கூறினார். இந்த ஆலையால்

இந்தியாவிற்கும் – ஸ்பெயின் நாட்டிற்கும் இடையிலான உறவுகளும், இந்தியாவில் தயாரிப்போம் – உலகிற்காக தயாரிப்போம் இயக்கமும் வலுவடையும் என்று அவர் தெரிவித்தார். உலகிற்கான சிவில் விமானப் போக்குவரத்து விமானங்கள் இந்தியாவில் தயாரிக்கப்படும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்றும், இதில், இந்தியாவின் சிறு – குறு மற்றும் நடுத்தர தொழில் துறை முக்கிய பங்களிக்கும் என்றும் அவர் கூறினார்.

இந்தியாவின் பாதுகாப்புத் துறை முன் எப்போதும் காணாத அளவில் வளர்ச்சி அடைந்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார். பாதுகாப்பு உற்பத்தித் துறையை துடிப்புள்ளதாக மாற்றவும், இத்துறையில் தனியார் பங்களிப்பை ஊக்குவிக்கவும் அரசு பல்வேறு நடவடிக்கைகளை

<u>மோடி குஜராத் -2 (18)</u>

எடுத்து இருப்பதாக அவர் தெரிவித்தார். இந்தியாவில் கடந்த 5 ஆண்டுகளில் பாதுகாப்புத் துறை சார்ந்த ஆயிரம் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் தொடக்கப் பட்டுள்ளதாகவும், கடந்த 10 ஆண்டுகளில் நாட்டின் பாதுகாப்பு ஏற்றுமதி, 30 மடங்கு அதிகரித்து இருப்பதாகவும் அவர் கூறினார். இந்தியாவில் தயாரிக்கப்படும் பாதுகாப்பு உபகரங்கள் தற்போது நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுவதாக அவர் தெரிவித்தார்.

வதோதராவில் நிறுவப்பட்டுள்ள விமான உற்பத்தி ஆலை இந்திய இளைஞர்களுக்கு புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் திறன்களை வழங்குவதிலும் ஆயிரக்கணக்கிலான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் முக்கிய பங்களிக்கும் என்று பிரதமர் கூறினார். இந்தியாவிற்கும் – ஸ்பெயின் நாட்டிற்கும் இடையே, உணவு, திரைப்படங்கள், கால் பந்து உட்பட, மக்கள் நிலையில் ஏற்கனவே, வலுவான தொடர்புகள் இருப்பதாக தெரிவித்த அவர், வரும் 2026ஆம்

ஆண்டை, கலாச்சார சுற்றுலா மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆண்டாக கொண்டாட இரு நாடுகளும் இணைந்து முடிவு செய்து இருப்பதாகக் கூறினார்.

ஸ்பெயின் பிரதமர் திரு. பெட்ரோ சாஞ்சஸ் இந்நிகழ்ச்சியில் பேசுகையில், ஏர் பஸ் நிறுவனத்திற்கும் – டாடா நிறுவனத்திற்கும் இடையிலான கூட்டாண்மையினால் இந்தியாவின் விமான உற்பத்தித் துறை

<u>மோடி குஜராத் -3 (11)</u>

முன்னேற்றம் அடைவதுடன், இதர ஐரோப்பிய நிறுவனங்கள் இந்தியாவிற்கு வரவும் வாய்ப்பு ஏற்படும் என்றார்.

ஏர் பஸ் நிறுவனத்திடம் இருந்து 56 சி-295 ரக ராணுவ விமானங்களை வாங்கும் ஒப்பந்தத்தின் கீழ், 40 விமானங்கள் வதோதரா ஆலையில் வைத்து டாடா நிறுவனத்தால் தயாரிக்கப்படும் என்றும், எஞ்சிய 16 விமானங்களை ஏர் பஸ் நிறவனம் தானே தயாரித்து வழங்கும் என்றும் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விமான உற்பத்தி ஆலையின் தொடக்க விழாவிற்கு முன்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஸ்பெயின் பிரதமர் திரு. பெட்ரோ சாஞ்சஸ் ஆகியோர் விமான நிலையத்தில் இருந்து சாலை பவனி நடத்தினர். விழா முடிந்த பின்னர் இரு தலைவர்களும் வதோதராவில் உள்ள புகழ்பெற்ற லஷ்மி விலாஸ் அரண்மனைக்குச் சென்று பிரதிநிதிகள் நிலையிலான பேச்சுவார்த்ததையில் ஈடுபட்டனர்.

மோடி வேலை வாய்ப்பு (17)

மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகளில் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 51 ஆயிரம் இளைஞர்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை காணொளி காட்சி மூலம் நியமனக் கடிதங்களை வழங்குகிறார். நாடு முழுவதும் மொத்தம் 40 இடங்களில் இத்தகைய ரோஜ்கார் மேளாக்கள் நடைபெற உள்ளன. இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகளை பெருக்குவதில் பிரதமர் திரு. நரேந்திர மோடி காட்டி வரும் முன்னுரிமைக்கு எடுத்துக்காட்டாக ரோஜ்கார் மேளாக்கள் திகழ்கின்றன. தேசத்தை கட்டி அமைக்கும் பணிகளில் இளைஞர்கள் பங்களிக்க ஏதுவாக சரியான வாய்ப்புக்களை இளைஞர்களுக்கு வழங்கி இளைஞர்களின் அதிகார பங்கேற்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் ரோஜ்கார் மேளாக்கள் நடத்தப் படுகின்றன. அரசு அலுவலகங்களுக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள இளைஞர்கள் iGOT கர்மயோகி இணையதளத்தின் கர்மயோகி பிராரம்ப் பாடங்கள் மூலம் அடிப்படை பயிற்சிக்கான வாய்ப்புக்களையும் பெறுவார்கள். இந்த இணையதளத்தில் இடம் பெற்றுள்ள ஆயிரத்து 400 ஆன் லைன் பயிற்சி வகுப்புகள், முன்னேறிய இந்தியாவை உருவாக்குவதில் திறம்பட்ட முறையில் பங்களிக்கத் தேவையான அடிப்படை திறமைகளை புதிய ஊழியர்களுக்கு வழங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இலஞ்ச ஒழிப்பு (17)

தேசிய இலஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு வாரம் இன்று முதல் நாடு முழுவதும் கடைபிடிக்கப் படுகிறது. பொதுவாழ்வில் தூய்மையை பராமரித்து ஊழலற்ற சமுதாயம் ஒன்றை உருவாக்கும் நோக்கத்துடன் இந்த ஒருவார காலத்தில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. ஆளுகை நடைமுறைகள் மற்றும் பொது நிர்வாகத்தின்

நன்னெறிகளும், வெளிப்படைத் தன்மையும் மேம்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில், நாட்டின் செழிப்பிற்கான நேர்மைக் கலாச்சாரம் என்ற கருப்பொருளுக்கு, இம்முறை இலஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு வார நிகழ்ச்சிகளில் முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது. புதுடெல்லியில் உள்ள இலஞ்ச ஒழிப்பு ஆணையத்தில் ஆணையர் திரு. பி.கே. ஸ்ரீவாத்ஸவா, ஆணைய ஊழியர்களுக்கு இலஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு உறுதி மொழி செய்து வைத்தார். புதுடெல்லியில் உள்ள ஆகாஷ்வாணி தலைமையகத்தில் தலைமை இயக்குநர் டாக்டர் பிராக்யா பாலிவால் கவுர் தலைமையில் ஊழியர்கள், இலஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு உறுதி மொழி ஏற்றுக் கொண்டனர். அனைத்து அமைச்சகங்கள், துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் இதர அரசு அலுவலகங்களில் ஊழியர்கள் இலஞ்ச ஒழிப்பு உறுதிமொழி ஏற்கிறார்கள்.

## புதுச்சேரி இலஞ்ச ஒழிப்பு (4)

இலஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு வாரத்தை ஒட்டி, இன்று புதுச்சேரி ராஜ்நிவாசில், இலஞ்ச ஒழிப்பு மற்றும் நேர்மைக்கான உறுதி மொழி ஏற்கப்பட்டது. துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் உறுதி மொழியை வாசிக்க ராஜ்நிவாஸ் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் உறுதி மொழி ஏற்றுக் கொண்டனர்.

## புதுச்சேரி வாக்காளர் பட்டியல் (12)

புதுச்சேரியில் அடுத்த ஆண்டு ஜனவரி 1ஆம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியலை சுருக்க முறையில் திருத்தும் பணிகள், வரைவு வாக்காளர் பட்டியலின் வெளியீட்டுடன், நாளை தொடங்க உள்ளன. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல், முகவரி மாற்றம் உள்ளிட்ட உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை,

வாக்காளர்கள் நாளை முதல், நவம்பர் 28ஆம் தேதி வரை, அந்தந்த வாக்குச் சாவடிகள் மற்றும் வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகங்களில் தாக்கல் செய்யலாம் என்றும், இதற்கென, நவம்பர் 9-10, 23-24 ஆகிய சனி – ஞாயிற்றுக் கிழமைகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் என்றும் தேர்தல் துறை அறிவித்துள்ளது. விண்ணப்பங்களை பரிசீலிப்பதற்கான காலம், டிசம்பர் 24ஆம் தேதி முடிவடையும் என்றும் அதன் பின்னர், 2025 ஜனவரி 6ஆம் தேதி, இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

<u>சாலை – புதுச்சேரி (8)</u>

புதுச்சேரி – விழுப்புரம் தேசிய நெடுஞ்சாலையில், மும்மொழி நாயக்கன் குப்பம் முதல், இந்திரா காந்தி சதுக்கம் வரை அகலமாக்கப்பட்ட சாலைப் பகுதியையும், ஆரியப்பாளையத்தில் சங்கராபரணி ஆற்றின் குறுக்கே புதிதாக கட்டப் பட்டுள்ள உயர் மட்ட மேம்பாலத்தையும், துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் இன்று மாலை திறந்து வைக்கிறார். முதலமைச்சர் திரு. ரங்கசாமி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் சட்டப்பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், அமைச்சர்கள், நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்கிறார்கள்.

<u>புதுச்சேரி – தோட்டக்கலை (9)</u>

தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ், புதுச்சேரியில் தோட்டக்கலை விவசாயிகளுக்கு, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று, உற்பத்திக்கு பிந்தைய மானியம் வழங்கினார். சுமார் 103 ஹெக்டேர் நிலப்பரப்பில் தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்த 439 விவசாயிகளுக்கு, மொத்தம் 15 இலட்சத்து 48 ஆயிரத்து 61 ரூபாய்க்கான மானிய உதவிகள் நேரடி

ரொக்க மானியமாக அவரவர் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டன. வேளாண் அமைச்சர் திரு. ஜெயகுமார் முன்னிலையில், சட்டப்பேரவை வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், சட்டப்பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தீபாவளி விடுமுறை (8)

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வரும் 30ஆம் தேதி புதன் கிழமை புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாமில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு விடுமுறை அறிவிக்கப் பட்டுள்ளன. தொழில் கல்லூரிகள் உட்பட கல்வி நிறுவனங்களுக்கும் இந்த விடுமுறை பொருந்தும் என்று புதுச்சேரி அரசின் உள்துறை, அறிவிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. 30ஆம் தேதி விடுமுறைக்குப் பதிலாக, வரும் நவம்பர் 16ஆம் தேதி சனிக்கிழமை வேலை நாளாக இருக்கும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

காரைக்கால் அங்காடி (10)

காரைக்கால் புதிய பேருந்து நிலையம் அருகே, மாவட்ட நிர்வாகமும், ஊரக வளர்ச்சித் துறையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள தீபாவளி அங்காடி மற்றும் கிராமச் சந்தையை, மாநில குடிமைப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. திருமுருகன் இன்று தொடக்கி வைத்தார். காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு. மணிகண்டன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், வட்டார வளர்ச்சி அதிகாரி திரு. செந்தில் நாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இன்று முதல் வரும் 30ஆம் தேதி வரை நடைபெற உள்ள இந்த தீபாவளி அங்காடியில், நூற்றுக்கும் மேற்பட்ட சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்

பட்டுள்ளன. துணி வகைகள், உணவுப் பொருட்கள் மற்றும் அலங்காரப் பொருட்களும் இதில் அடங்கும்.

<u>பேரிடர் பயிற்சி (15)</u>

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் 20ஆவது நிறுவன நாளை ஒட்டி புதுடெல்லியில் இன்று நடைபெற்ற விழாவில், நேரு யுவகேந்திரா, தேசிய மாணவர் படை மற்றும் சாரணர் – சாரணியர் இயக்கத்தைச் சேர்ந்த சுமார் 2 இலட்சத்து 37 ஆயிரம் தன்னார்வலர்களுக்கு பேரிடர் மீட்புப் பணிகளில் பயிற்சி அளிப்பதற்கான யுவ ஆப்தா மித்ரா திட்டத்தை, மத்திய உள்துறைச் செயலர் திரு. கோவிந்த மோகன் தொடக்கி வைத்தார். பயிற்சி பெறுவோரில் குறைந்தது 50 சதவிகிதம் பேர் பெண்களாக இருப்பார்கள் என்று அவர் கூறினார். பேரிடர் சம்பவங்களின் போது மக்களின் உதவிக்கு வரக்கூடிய முதலாவது பாதுகாவலர்களாக இளைஞர்களை தயார் படுத்த வேண்டும் என்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இவ்வாண்டு ஜூலை மாதம் யுவ ஆப்தா மித்ரா திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தார். நாட்டில் பேரிடர் அபாயம் அதிகமுள்ள 315 மாவட்டங்களில் அமலாக உள்ள இத்திட்டத்திற்கு தேசியப் பேரிடர் மீட்புப்படை சுமார் 470 கோடி ரூபாய் செலவிடும்.

<u>ஜார்கண்ட் (11)</u>

ஜார்கண்டில், 43 தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 13ஆம் தேதி நடைபெற உள்ள முதல் கட்ட சட்டமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுப் பரிசீலனை இன்று நடைபெற்றது. மொத்தம் 805 பேர் வேட்புமனு தாக்கல் செய்து இருந்த நிலையில். பரிசீலனையின் போது ஏற்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் எதிர் பார்க்கப்படுகின்றன. முதல் கட்ட

ஜார்கண்ட் சட்டமன்றத் தேர்தலில், ஏற்கப்பட்ட மனுக்களை விலக்கிக் கொள்ள வரும் 30ஆம் தேதி கடைசி நாளாகும். இதற்கிடையே நவம்பர் 20ஆம் தேதி நடைபெற உள்ள மகாராஷ்டிரா சட்டமன்றத் தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் நாளையுடன் முடிவடையும் நிலையில், இன்று முதலமைச்சர் திரு. ஏக்நாத் ஷிண்டே உட்பட முக்கியத் தலைவர்கள் பலரும், தத்தம் தொகுதிகளில் வேட்பு மனு தாக்கல் செய்தனர்.

<u>உணவு விநியோகம் (11)</u>

நவீன அரிசி ஆலைகளில் உற்பத்தி ஆகும் அரிசி முழுவதையும் கொள்முதல் செய்ய அரசு உறுதி பூண்டுள்ளதாக மத்திய உணவு மற்றும் பொதுவிநியோகத் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி, விவசாயிகளுக்கு உறுதி அளித்துள்ளார். அரசி ஆலை உரிமையாளர்களுக்கான, இந்திய உணவுக் கழகத்தின் குறை தீர்ப்பு வசதியை, அவர் இன்று புதுடெல்லியில் திறந்து வைத்துப் பேசினார். குறை தீர்ப்பு கட்டமைப்பை முறையாக செயல்படுத்த அரசு உயர் முன்னுரிமை அளிப்பதாகவும் புகார்ப் பதிவு முதல் தீர்வு வரை அனைத்து நடைமுறைகளும் ஆன்லைனில் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். அரிசி ஆலைகளின் எல்லா புகார்களுக்கும் வெளிப்படையான முறையில் தீர்வு காணப்படும் என்றும் அவர் உறுதி அளித்தார்.

ஜம்மு – காஷ்மீர் (6)

ஜம்மு – காஷ்மீரில் இன்று, அக்னூர் பிரிவைச் சேர்ந்த பட்டால் பகுதியில் இராணுவ ஆம்புலன்ஸ் ஒன்றை குறி வைத்து  தீவிரவாதிகள் பலமுறை சுட்டதைத் தொடர்ந்து பாதுகாப்புப் படையினர் பெரிய அளவிலான தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். பட்டால் பகுதியில் உள்ள ஒரு கிராமத்தில் ஆயுதம் ஏந்திய தீவிரவாதிகளின் நடமாட்டம்  இருப்பதாகவும் கிராமவாசிகள் தெரிவித்துள்ளனர்.